விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 20 புதன்கிழமை (05-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 268

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## ● பிரிவினைக் கோரிக்கை கைவிடப்படும்பட்சத்தில்

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஜே. வி. பி. தடையாக இருக்காது

### பத்திரிகையாளர் முன் ரில்வின் சில்வா

(நமது நிருபர்)

தகுதிகாண் அரசு செயற்படும காலத்தில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) எந்த விதமான தடையையும் விதிக்கமாட்டாது.

இனப்பிரச்சினைகான தீர்வு விடுதலைப் புலிகள் தரப்பிலோ; பொதுஜன ஐக்கிய முன்னணியின் தரப்பிலோ இல்லை. இரண்டு தரப்பினருமே யுத்தநிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தீர்வுகாணவேண்டும். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுடன் மக்கள் விடுதலைமுன்னணி (ஜே வி.பி) இணைந்து தகுதிகாண் அரசு ஒன்றை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையை அடுத்துஎட்டப்பட்ட இணக்கப்பாட்டினைத் தொடர்ந்து ஜே.வி.பிகொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடுஒன்றில் பத்திரிகையா

8ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்புலிகளுடன் பேச அரசு எப்போதுமே தயார்

### அமைச்சர் மங்களசமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

தகுதிகாண் அரசாங்கத்தோடும் விடுதலைப்புலிகள் பேசுவதற்கு தயார் என்றால் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ளது.

இவ்வாறு அமைச்சர்மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்;

தகுதிகாண் அரசின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப்புலிகளோடு பேசும் வாய்ப்புக்கள் பாதிக்கப்படுமா என அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவிக்கை

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. எம். பிக்கு எதிராக நடவடிக்கை

### சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

தம்மைப் பயமுறுத்திய ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்காமீதும்டெய்லி மிரர்' பத்திரிகை மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக சபாநாயகர் அனுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்:

ஐக்கியதேசியகட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்கா: சபாநாயகர் பதவிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் டெயிலிமிரர் பத்திரிகைக்கு அறிக்கை ஒன்றை விடுத்திருப்பதாகவும், பாராளுமன்றத்தையும் கண்டித்துள்ளதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று தெரிவித்துள்ளார்;

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தொடர் வறட்சி தண்ணீர் இன்றி மாணவர் அவதி பல்கலைக்கழகங்கள் மூடப்படலாம்

(கொழும்பு)

கொழும்புமற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவும் வறட்சியால் பல்கலைக் கழகங்கள் பலவும் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருவக்காற்றுக் காலத்தின் போது இம்முறை இங்கு போதிய மழை பெய்யாததாலேயே இவ் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் நீரேந்து பகுதிகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழகங்க

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறை கடற்பகுதியில்

## கரும்புலித் தாக்குதல் இருகடற்படையினர் பலி

### புலிகளின் குரல் தெரிவிப்பு

(வவுனியா)

பருத்திதுறைகடற்பரப்பில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் விசைப்படகு அணியின் மீது கடற்கரும்புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் கடற்படையினரின் மூன்றுபடகுகள்சேதமடைந் துள்ளதாகவும் இருகடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் புலிகளின்குரல் வானொலிநேற்றிரவு அறிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இக்கரும்புலித்

(8 ம் பக்கம் பார்க்க)

### ஐந்து ஆணைக் குழுக்கள்

## இன்று தேவையில்லை சமாதானமே வேண்டும்

### அமைச்சர் மகிந்த விஜயசேகரா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுமக்கள் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது ஐந்து ஆணைக்குழுக்கள் நிறுவப்படுவதை அல்ல, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று அமைச்சர் மகிந்த விஜயசேகரா தெரிவித்துள்ளார்;

இது தொடர்பாக அமைச்சர் மகிந்த விஜயசேகரா மேலும் தெரிவிக்கையில்கூறியதாவது,

ஐந்து சுதந்திர ஆணைக் குழுக்களை தவிர மக்கள் யாழ்ப்பாணத்துக்கு சுதந்திரமாக சென்றுவரக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாக வேண்டுமென்று விரும்புகின்றனர் யுத்தத்திற்குச் சமாதானசூழ்நிலை ஒன்றுகாணபடவேண்டிய சூழ்நிலையில் நாடு இருக்கின்றபோது இந்த 5ஆணைக்குழுக்களைப் பற்றி பேசுவது அர்த்தமற்றதுஎன்று கூறினார். (வ)

## புலிகளால் மரண தண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்று மாலை இளம் குடும்பஸ்தரொருவருக்கு விடுதலைப் புலிகளினால் பகிரங்க மரண தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர

→08 ஆம் பக்கம் பார்க்க

### நம்பிக்கையில்லா பிரேரணையை

## பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பின்னடிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுமீதுஐக்கியதேசிய கட்சி கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு சமர்ப்பிக்க வேண்டுமென அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஐக்கியதேசியக்கட்சி நிராகரித்துள்ளது.

பாராளுமன்றம் கூடும் போது 7ம்திகதி அரசுமீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியைக் கேட்டிருந்ததாக பிரதம கொறடாவும் அமைச்சருமான றெஜிரணதுங்கா தெரிவித்துள்ளார்:

அரசாங்கம் கோருகிற மாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது கொண்டுவர முடியாதென்றும் பின்னர் ஒருதிகதியில் அதனை சமர்ப்பிப்பதாகவும் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

இதேவேளை சபாநாயகர் அனுராபண்டார நாயக்கா தலைமையில் கட்சித்தலைவர்கள் கூட்டம் நேற்றுநடை

(8 ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கும் ஜே.வி.பிக்கும்இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

### வைபவரீதியாக இன்று இடம்பெறும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கும் ஜே.வி.பிக்குமிடையில் இடம்பெற்ற தகுதிகாண் அரசமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையின்போது காணப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து இன்று பிற்பகல் 3மணிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்ஒன்றில் இருசாராரும் கைச்சாத்திடவுள்ளனர்;

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் வைபவ ரீதியாக இடம் பெறவுள்ள இவ்வைபவத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் அமைச்சர் டி. எம். ஜயரத்தினாவும்,

→8 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆத்மஜோதி முத்தையா போன்ற ஞானியை கல்விநிலையங்களால் உருவாக்க முடியவில்லை

## யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

கல்விக்கூடங்களும் பல்கலைக்கழகங்களும் பல கலாநிதிகளையும், பேராசிரியர்களையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும் வைத்திய நிபுணர்களையும், பட்டதாரிகளையும் உருவாக்கிவருகின்றன. எனினும் ஆத்மஜோதி போன்ற மகா ஞானியை உருவாக்கமுடியாமல் இருக்கின்றதே. இதற்கு காரணம் என்ன என்று எம்மைப் போன்றவர்கள் சிந்திக்காமலிருக்க முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் முன்னாள் தலைவர் அமரர் ஆத்மஜோதி முத்தையாவின் 6வது ஞாபகார்த்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்: திருமதி நாச்சியார்-செல்வநாயகம் குறிப்பிட்டார்.

மேற்படிவிழா ஏழாலையில் அமைந்துள்ள கைதடிசைவச் சிறுவர் இல்லத்தில் சைவ பெரியார் ந.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற போது தொடர்ந்து பேசிய திருமதி நாச்சியார் குறிப்பிட்டதாவது,

பல நூல்களைக் கற்றுக் கொள்வதால் அறிவைவளர்த்துக் கொள்ளலாம் என்பது உண்மை எனினும்ஒருவன் சாதனையாளனாக விளங்குவதற்கு அவன் ஆத்மீகத்தில் உயர வேண்டும்,

வெறும் போதனைகளும் பட்டங்களும், பதவிகளும் நாட்டில் எதனையும் சாதித்து விடாது. சாதனையோடு கூடிய போதனையே இன்றுஎமக்கு தேவையாக உள்ளது.

ஆத்மஜோதி மாபெரிய ஞானி, சாதனையாளன் என்ற பெருமைக்குரியவர் அவர் மேற்கொண்ட தொண்டுகள் அளப்பரியன

இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை தட்டிக்கேட்பதற்காக இந்து சமயப் பேரவையை ஸ்தாபித்து உலகமெங்கும் சென்று ஆத்மீக சிந்தனையை மக்கள் மனதில் பதிய வைத்த பெருமைக்குரியவர். ஆத்மஜோதி மறைந்தும் அவர் பணிகளும், தொண்டுகளும், சிந்தனைகளும் தொடர்கின்றன என்றால் இது அவரின் தூய சிந்தனையையும், தூய வாழ்வையும், தெளிவாக்கின்றது

வலி-வடக்கு பிரதேச சபை தலைவர் திருமதி பா.ஸ்ரீ பாஸ்கரன் பேசுகையில்,

பாதிக்கப்பட்ட கைதடி சைவ சிறுவர் இல்லத்தை நடாத்துவதிலிலுள்ள சிரமங்களை நான் நன்குபுரிகிறேன் இந்தப் பிள்ளைகளுக்கு உதவ வேண்டியது எமது பெரும் பொறுப்புக்களில் ஒன்றாகும்

மாடி மண்டபங்களைக் கட்டிக் கொள்ள முடியாது போனாலும், சிறு குடில்களை அமைத்தாவது, சைவச் சிறுவர்களைப் பாதுகாத்து வரும் இந்து சமயப் பேரவைப் பணிகளைப் பாராட்டுகின்றோம். எமது மக்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்ற போதும் இதுபோன்ற நிறுவனங்களுக்கு உதவி வருவது பெருமைக்குரியதாகும் இன்று சைவச் சிறுவர் சிறுகுடிலைத் திறந்து வைப்பது எமக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது என்றார்.

யாழ்-இந்து சமயப் பேரவைக் கௌரவ செயலாளர் சி. சக்திகிரீவன் பேசுகையில் இந்த நாட்டில் யுத்தம் தொடர்ந்தால் இந்து மக்களின் ஆத்மீகப் பௌதிக கட்டமைப்புக்களும், ஆத்மீக பாரம்பரிய பண்பாடுகளும், அழித்தொழிக்கப்பட்டுவிடும் என்பதை ஆத்மஜோதி நன்கு உணர்ந்தமையால் சமாதானம் வேண்டி யாத்திரையைநடாத்திவந்தார்.

ஐ. தே. கட்சி ஆட்சிக்காலததில் ஆத்மஜோதி நிலையம் தீக்கிரை யாக்கப்பட்டது. இன்று ஆத்மஜோதியால் புனரமைப்பு செய்யப்பட்ட கைதடி சிறுவர் இல்லமும் அழிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆத்மஜோதியால் உருவாக்கப்பட்ட பல பௌதிக கட்டமைப்புக்கள் அழிக்கப் பட்டுள்ளன எனினும் ஆத்மஜோதியின் ஆத்மீக ஒளியை எவராலும் அணைத்துவிட முடியாதிருக்கின்றது. இதுவேஆத்ம ஜோதியின் ஆத்மீக வாழ்விற்கு கிடைத்த வெற்றியாகும்.

யாழ்-பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த நா.வி.மு நவரத்தினம் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க)

## சடலம் ஒப்படைப்பு

(புலோலி)

பொலிகண்டி அல்லிப்பிள்ளையார் ஆலய வீதியில் இறந்து கிடந்த வயோதிபர் ஒருவரின் சடலமொன்றை நேற்று பொலிஸார் மீட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் பளை தர்மக்கேணியைச் சேர்ந்த க. செல்லையா (வயது 62) என்பவர் என இனங்காணப்பட்டுள்ளது.

மரணவிசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி கிருபாகரசூரியர் மேற்கொண்டார். (இ-05-52-23)

## மருத்துவ முகாம்

[உடுவில்]

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.

இதில் இரத்த அழுத்தம், நீரிழிவு, கண்பரிசோதனை போன்ற மருத்துவ சேவைகள் நடைபெறவுள்ளன.

[உ-129]

### ★ கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதல்

## சந்தேகநபர்கள் 12 பேரையும் ஒக். 01 வரை தடுத்து வைக்கவும்

### நீர்கொழும்பு நீதிவான் உத்தரவு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 12 பேர்களையும் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிமன்ற நீதிவான் எம். என். புரான் உத்தரவிட்டுள்ளார்.

விமானப்படைத்தள தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில்எட்டுத்தமிழர்கள் உட்பட 12 பேர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்;

விமானப்படைத்தள தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 4 விமானப் படையினரும் இருபெண்கள் உட்பட எட்டுத் தமிழர்களும் கடந்த திங்கட்கிழமை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே ஒக்ரோபர் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

காவலில் வைக்கப்பட்டுள்ள எட்டுத் தமிழர்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்த எண்மர் மீதும், தாக்குதல் குறித்த தகவல் தெரிந்திருந்தும் மறைத்து வைத்திருந்தமை: புலிகளுக்கு உதவி செய்து ஒத்தாசை புரிந்தமை என்பன போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இரசாயனப்பரிசோதனைக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் எதிர்வரும் 7 திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (வ)

### கடமையின் போது காயம்

## பொலிஸ் கான்ஸ்டபிளிற்கு பெறுமதி மிக்கஉபகரணம்

(கொழும்பு)

கடமையில் இருக்கும் போது காலில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 2லட்சம் பெறுமதியான உபகரணம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நாரஹென் பிட்டிபொலிஸ் மருத்துவமனையில் வைத்து இவ்வுபகரணத்தை பொலிஸ் சேவா வனிதாப் பிரிவின் தலைவி லக்சுமி கொடித்துவக்கு வழங்கினார்;

பதவியாவில் கடமையாற்றும்போது விடுதலைப்புலிகளினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் போதே பிரஸ்தாப பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது: (க- 04)

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

விசேடமாக இலங்கை அணித்தலைவர் சனத்ஜெயசூரியாவிற்கு வாழ்த்தைதெரிவித்த அவர் ஏனையவீரர்களையும் பாராட்டியுள்ளார்.

இலங்கை,இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்றுமுடிந்த போட்டிகளில் இரண்டுதொடர்களில் இலங்கைஅணி இந்தியஅணியை தோற்கடித்ததை ஒட்டியே ஜனாதிபதிதனது வாழ்த்தை தெரிவித்தார். (க.4(

## தேர்தல்கள் எதுவும் சமீபத்தில் இல்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடமோ அல்லது எதிர்வரும் வருடத்திலோஎதுவித தேர்தல்களும்நடைபெறமாட்டாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்;

நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வடமத்திய மாகாணத்தின்அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் அங்கு மேலும் பேசுகையில்; புதிய அரசாங்கம் அமைவது தொடர்பாகவோ அல்லது ஆட்சிமாற்றம் தொடர்பாகவோ கவலைப்படாமல் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த காலப்பகுதிக்குள் முடிக்கப்படல் வேண்டும் தேர்தல்கள் வரும் போது மாத்திரம் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப் படும் கலாசாரம் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்; (இ-05)

### பரீட்சை முடிவு

## விரைவில்

[யாழ்ப்பாணம்]

யாழ்; சைவ பரிபாலன சபையினால் அண்மையில் நடத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டுக்கான இளம் சைவப்புலவர் பட்டப் பரீட்சை முடிவுகள் இம் மாதம் 9 .ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியாகவுள்ளதாக சைவபுலவர்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

[உ-ர்]


## தரமான புழுக்கொடியல், பச்சை ஒடியல் கொள்வனவு

தரமான புழுக்கொடியல், பச்சை ஒடியல் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

தொடர்பு கொள்ளவும்:
முகவரி,

சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை,
859, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

(சி 2449)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை

## கலைப்பீடம் - வழிகாட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2001 / 2002ற்கு பதிவை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் 14-09-2001 திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகின்றன. புதுமுக மாணவர்கள் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைக்கழக அனைத்து வருட மாணவர்களுக்கும் புதிய கல்வியாண்டு 2001/2002 விரிவுரைகள் 01-10-2001 ஆரம்பமாகின்றன.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
03-09-2001

(சி 2448)

# உயர்கல்வி நிறுவனங்களால்தான் ஈழத்து இலக்கியம் வளர்கிறது

## இது தப்பான எண்ணம் என்கிறார் செம்பியன் செல்வன்

(தென்மராட்சி)

உயர் கல்வி நிறுவனங்களால் தான் ஈழத்துஇலக்கியம் வளர்க்கப்படுகிறது என்ற தப்பான எண்ணம் எம்மத்தியில் நிலவுகின்றது.

தற்போதுமாதிரி இலக்கியங்கள் தான்அதிகமாகக் காணப்படுகின்றனவேயொழிய உண்மையான இலக்கியங்களைக் காண முடியாமல் உள்ளது. இந்த நிலை மாற்றமடையும் பட்சத்தில் எமது பிரதேசத்தில் இலக்கிய வளர்ச்சி மென் மேலும் வலிமைபெறும்.

இவ்வாறு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவரான செம்பியன் செல்வன் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்ற அமரர்கள் பாவலன் பா. சத்தியசீலன், எழுத்தாளர் துரை சுப்பிரமணியம், எழுத்தாளர் செ சி. பரமேஸ்வர சர்மா ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையைச்சேர்ந்த க. தணிகாசலம் அங்கு பேசும்போது.

அமரர் துரை. சுப்பிரமணியம் தனியான ஓர் எழுத்தாளர் மட்டுமல்ல அவர் சிறந்த மொழிபெயர்ப்பாளர் அவரது படைப்புக்கள் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்திருந்த போதிலும்கூட, நூலுருவில் எதுவுமே வெளிவரவில்லை.

இலக்கிய உலகில் விரிந்த பார்வை கொண்டவர். மண் வாசனை எழுத்தாளர் எளிய நடை, எளிய பதம் அவரது பாணியாகும். சமூகப் பிரச்சினைகளையே என்றும் தமது படைப்புகளின் கருவாகக் கொண்டவர். அத்துடன் தான் வாழ்ந்த சமூகத்தை விஞ்ஞானப் பார்வையுடன் பார்த்தவர் எனக் கூறினார்.

அமரர் பாவலன் சத்தியசீலன் பற்றி எழுத்தாளர் புத்தொளி உரை நிகழ்த்துகையில்;

சிறுவர்இலக்கியத்தில் நல்ல பல படைப்புக்களை வெளியிட்டவர்; துணிவு மிக்கவர். சிறுவனாக இருக்கும் போதே கவிதைத் துறையில் கால் பதித்தவர். தனது வாழ்நாளில் பல சவால்களையும், எதிர் நீச்சல்களையும் போட்டு இலக்கியத்துறையில் சாதனை படைத்தவர் எனக் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் நா. சுந்தரம் பிள்ளை அங்கு உரையாற்றும் போது,

இன்றைய காலகட்டத்தில், பல்கலைக் கழகம் சொல்வது எல்லாம் தான் இலக்கியம் என்று சொல்லக் கூடாது. பல்கலைக்கழகத்தில் வானொலி நாடகம் புகட்டப்படுவதில்லை. பேராசிரியர் கைலாசபதி எந்தவொரு நாடகமும் எழுதவில்லை, எனக் குறிப்பிட்டார்.

தமிழ்எழுத்தாளர் ஒன்றிய இணையச்செயலாளர்உடுவில் அரவிந்தன் நன்றியுரை வழங்கினார். (உ-10,77)

# போஷாக்கு மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் போஷாக்கு மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான அறிவூட்டல் பயிற்சிப் பட்டறை அண்மையில் இடம்பெற்றது.

இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குறித்த பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் போஷாக்குப் பிரச்சினைகளை இனம்காணல், பங்களிப்பு பாங்கான போஷாக்கு மேம்பாட்டுத் திட்டமும்அதனைச் செயலாக்கும் முறையும், போஷாக்கு மேம்பாட்டு முயற்சியில் மரபு வழியான நடைமுறை ஆகிய விடயங்கள் தொடர்பாக கருத்துரையும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. (உ-75)

# இளைஞர்சேவைஅலுவலர் மீன் நேர்முகப் பரீட்சை

## இம்மாதம் குருநாகலில்

(ஏச்சமோட்டை)

இளைஞர் சேவைகள் அலுவலர் தரம் 1 பதவிக்காக விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான மீன் நேர்முகப்பரீட்சை இம்மாதம் 13 ஆம் திகதி குரு ...

... ஆம் திகதி இடம்பெறும்மற்றுமோர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுமாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

இருப்பினும் இக்கடிதங்கள் நேர்முகத் தேர்வுத் தினத்திற் ...

# கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு மத்தியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் நெடுந்தீவுப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து இம்மாதம் கட்டாக்காலி நாய்கள் அனைத்தும் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு வசதியாக வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வளர்க்கும் படி நெடுந்தீவுப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (உ-76)

# போதைப் பொருள் மீட்பு

[கொழும்பு]

இந்தியாவில் இருந்து இலங்கை வந்த ஒருவரிடமிருந்து 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சனியன்று இரவு 11.20 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய வத்தளையைச் சேர்ந்த 25 வயதுடைய முஸ்லிம் இளைஞர் ஒருவரிடமிருந்தே மேற்படி போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. [உ]

# நவீனரக போர் விமானங்களால் புலிகளின் இலக்குகளைதாக்கதிட்டம்

## படையினர் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நவீனரக ஆயுதங்களுடனும், அதி நவீன விமானங்களுடனும் மீண்டும் மீண்டும் புலிகளின் இலக்குகளைத்தாக்கத் திட்டமிட்டுள்ளதாக மட்டக்களப்பில் படையினர் விடுத்துள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மட்டக்களப்பு வாழ் அன்பான தமிழ் மக்களே'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த துண்டுப் பிரசுரத்தில்,

ஒருபோதும் ஈடேறமாட்டாத 'ஈழம்' என்ற கனவு இராச்சியத்தைக் கட்டியாளும் புலிகளுக்கு எதிராக நாம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை, தியாகி லெப்டினன் கேணல் திலீபனின் 14வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி குடாநாட்டின்மீது பாரிய படை முற்றுகை ஒன்றுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அரசைப் பலமாக எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ

# இராசி பலன்

05-09-2001

(ஆவணி 20, புதன்)

துதியை காலை 6.49 வரை

உத்தரட்டாதிபி.ப3.23வரை

ராகுகாலம் 12.04-1-34

நல்லநேரம் 4.34-6.04

சித்தம்

**மேடம்**

கோபப்படுதல், காரிய அலைச்சல், தனவிரயம், இனசனத் தொடர்பு.

**இடபம்**

தனலாபம், தொழில் சிந்தை, நல்லகாரியம், மன மகிழ்ச்சி.

**மிதுனம்**

தொழில் வெற்றிமேன்மை, முயற்சி கைகூடும், நல்ல செய்தி.

**கடகம்**

பிரயாணம், வயிற்றுக் கோளாறு, அச்சமானநிலை, காரியதாமதம்.

**சிங்கம்**

வீண்தொல்லை, உடல் சோர்வு, முயற்சிதடங்கல், உஷ்ணவியாதி.

# விளையாட்டு விழா

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர் விளையாட்டு விழா 8 ஆம் திகதி சனிக்கிழமை 9 00 மணிக்கு புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. [உ-75]


வலி கிழக்கு பிரதேச சபை
தகவல் தொழில் நுட்பப் பூங்காவுடன் இணைந்து நடாத்தும்
கணனிப் பயிற்சி நெறி

பின்வரும் பாட நெறிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

CERTIFICATE COURSES

இளைஞர் சேவைகள் அலுவலர் தரம் 1 பதவிக்காக விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான மீள் நேர்முகப்பரீட்சை இம்மாதம் 13 ஆம் திகதி குருநாகல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமாகாண அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஏப்ரல் மாதம்யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் அலுவலகத்தில் நடைபெற்ற போதிலும் இதுதொடர்பான விபரங்கள் ஏதும் வெளியிடப்படாத நிலையில், இந்நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றிய சிலருக்கு கடந்தமாதம் 25 மோர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுமாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

இருப்பினும் இக்கடிதங்கள் நேர்முகத் தேர்வுத் தினத்திற்குப் பின்னரே உரியவர்களின் கைகளுக்குக் கிடைத்ததையடுத்து இப்புதிய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பானமேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் அ. சக்திவேல் அறிவித்துள்ளார்.

(உ-59)

## ஊர்காவற்றுறையில்

# பின்தங்கிய கிராமமாக சூரியவத்தை தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில், நாரந்தனை தெற்கு 'சூரியவத்தை' பின்தங்கிய கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு தோறும் ஒவ்வோர் பின்தங்கிய கிராமத்தை இனம் கண்டு அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில்மேற்படி கிராமம்பின்தங்கிய கிராமமாக தெரிவு

85 குடும்பங்களைக் கொண்ட மேற்படி கிராமம் தொடர்பான விபரங்கள் அனைத்தும் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்,

விரைவில் சகல வசதிகளும் கொண்ட மாதிரிக்கிராமமாக இதனை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரியதாமதம்.

### சிங்கம்

வீண்தொல்லை, உடல் சோர்வு, முயற்சிதடங்கல், உஷ்ணவியாதி.

### கன்னி

செல்வாக்கு, பிரயாணம், நல்லகாரியம், நண்பர்கள் உதவி.

### துலாம்

முயற்சி பலிதம், பகைவரால் நன்மை, சந்தோசமான சம்பவம், தனவரவு.

### விருச்சிகம்

புத்திரரால் கவலை, வியாபார மேன்மை, மனச்சஞ்சலம், காரியதாமதம்.

### தனுசு

உறவினர் மனஸ்தாபம், பகைவர் நேசம், தன்னம்பிக்கைக்குறைவு, நிலைமாற்றம்.

### மகரம்

இனிய சம்பவம், கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, தனவரவு.

### கும்பம்

மாதர் நட்பு, காரியதாமதம், விவாதம், பொருள் விரயம்.

### மீனம்

கற்பனை மிகுதி, கீர்த்தி, காரியநன்மை, நண்பர்கள் உதவி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).


பின்வரும் பாட நெறிகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**CERTIFICATE COURSES**

| | |
|---|---|
| Ms Word | Ms Excel |
| Ms Access | Ms Power Point |
| Page Maker | Corel Draw |
| Auto Cad | C/C++ |
| Visual Basic | Java |
| Inter Net & E-Mail | Hard Ware |

**DIPLOMA COURCES**

Diploma in MS-Office
Diploma in DTP
Diploma in Hardware Technology

★ மேற்படி பாட விதானங்களைக் கற்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வலி கிழக்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம் நீர்வேலி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

★ விண்ணப்ப முடிவு திகதி 25-09-2001

★ குறைந்த கட்டணத்தில் பாட விதானங்கள் யாவும் கற்பிக்கப்படும்.

குறைந்த கட்டணத்துடன்
கணனி பயில ஓர் அரிய
சந்தர்ப்பம்

தவிசாளர்
பூ. குணசிங்கம் (ஜே.பி.யு.எம்)
வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

### தங்கிச் செல்லும்

# தமிழ்ப் பெண்களைப் பயன்படுத்தி

# வவுனியா விடுதிகளில் விபச்சாரம்

### பரவலாக இடம் பெறுவதாக ரெலோ எம்.பி. சுட்டிக் காட்டு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள விடுதிகள் பலவற்றில் விபச்சார நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக ரெலோ எம். பி. செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரிலுள்ள விடுதிகளின் உரிமையாளர்கள் உடன் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமெனவவுனியா மாவட்ட பொலிஸ் அதிகாரிக்கு அவசர கடிதமொன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில், வட பகுதியைச் சேர்ந்த அனேகமான பெண்கள் இவ் விடுதிகளில் தங்கிச் செல்வதால் விபச்சார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத பெண்களை மிரட்டி இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதுடன்,

அவ்வாறு சம்மதிக்காதவர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பொலிஸாரிடம் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## எரிபொருள்களுக்கு எவ்விததட்டுப்பாடுமில்லை

### பெ. கூ. தா. அறிவிப்பு

(கொழும்பு)

வேண்டுமென்றே சிலர் மேற்கொள்ளும் விஷமத்தனமான பிரசாரங்களை நம்பி கறுப்புச் சந்தைகளில் அதிக விலை கொடுத்து எரிபொருட்களைக் கொளவனவுசெய்ய வேண்டாம்என யாழ். பெற்றோலியக்கூட்டுத்தாபன வட்டாரங்கள் பொதுமக்களை எச்சரித்துள்ளன.

கடந்த சில மாதங்களில் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதநிலை காரணமாக பெற்றோலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து தட்டுப்பாடு தொடர்வதாகச் சிலர் பொய் கூறி பொது மக்களை ஏமாற்றி வருவதாகவும்,

தற்போது எந்தவொரு எரி பொருளுக்கும் தட்டுப்பாடு இல்லை என்பதுடன், எரி பொருள் நிரப்பு நிலையங்களில் வேண்டிய அளவு அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (உ-10)

## திவ்வியன் கைது; அறிக்கைஉரியஇடத்திற்கு

### அனுப்பி வைக்கப்படவில்லை

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைது தொடர்பான அறிக்கை இதுவரை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லையென தொல்லை தவிர்ப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திவ்வியனின்கைது தொடர்பான அறிக்கையைச்சட்டமா அதிபரின் திணைக்களத்திற்கு உடன் அனுப்பிவைக்குமாறு தொல்லை தவிர்ப்புக் குழு காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பொலிஸாரிடம் கேட்டுக்கொண்ட போதும் இன்றுவரை அந்த அறிக்கை சட்டமா அதிபர் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு திவ்வியனின் கைது தொடர்பானஅறிக்கையும், இரசாயனப்பகுப்பாய்வு அறிக்கையும் அனுப்பிவைக்கப்படாமையினால் திவ்வியனை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவருவதாகவும் தொல்லை தவிர்ப்புக் குழு தெரிவித்துள்ளது. (வ)

## வன்னியில் கடும் வறட்சி; வயிற்றோட்டம் தீவிரம்

(வவுனியா)

வன்னிப் பகுதியில் நிலவும் கடும் வறட்சிகாரணமாக அப்... களை உண்பதன் மூலமே வயிற்றோட்டம் ஏற்படுவதாகவும்;

---

விசேட அபிஷேக

## பூஜை

(ஈச்சமோட்டை)

வல்வெட்டித்துறை வயலூர் முருகன் தேவஸ்தான வருடாந்தமஹோற்சவத்தைமுன்னிட்டு விசேட அபிஷேக பூஜைகள் எதிர்வரும் 7 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளன;

இவ் விசேட அபிஷேக கிரியைகளை வல்வை ப. மனோகரக் குருக்கள் நடத்தவுள்ளார். (செ-59)

## ஆலயத்தில் சிரமதானம்

(கல்வயல்)

போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய உட்புறம் மற்றும் சுற்றுப் பிரகாரம் என்பன அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது.

இவ் வேலைகள்முடிவடைந்ததும் பிராயச்சித்த கிரியைகள் செய்யப்பட்டு நித்திய பூசைகள்நடைபெறவுள்ளன; (உ-111)

## பாதை திறக்கப்படுமா?

(கல்வயல்)

புத்தூரிலிருந்து வாதரவத்தை வீரவாணி வண்ணாத்திப்பாலம் ஊடாக மட்டுவில் கனகன்புளியடிசந்தியை ஊடறுத்து மீசாலை செல்லும் ஏ. பி தர நெடுஞ்சாலை, பொதுமக்கள் பாவனைக்கு விடப்படாமல் மூடப்பட்டுள்ளதால் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் முடவன்

---

## வறட்சி நிவாரணம் வழங்குவதில் மோசடியாம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண உதவிகளில் பாரிய ஊழலும், மோசடிகளும் இடம்பெற்று வருவதாக தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன;

அரசாங்கத்தினாலும் தனியார் துறைகளினாலும்வழங்கப்பட்டு வரும் இந்நிவாரண உதவிகள் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்று நிவாரணப் பணியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்; (வ)

## பிறேசில் தூதுவராக தளுவத்தை நியமனம்?

[கொழும்பு]

பிறேசிலில் புதிதாகத் திறக்கப்படவுள்ள இலங்கைத் தூதரகத்தின் தலைமைக்கு கூட்டு நடவடிக்கைத் தளபதி ஜெனரல் றோஹான் எஸ். தளுவத்தை நியமிக்கப்படலாம் என்று அறியப்படுகிறது.

இதுபற்றி வெளியுறவு அமைச்சுசெயலாளர்ஜீ: விஜய சிறி கூறுகையில் பிறேசில் மிகுந்த பொருளாதார வளமுள்ள பெரிய நாடு தென்னாபிரிக்க நாடுகளில் எமது தூதரகங்கள் குறைவாகவேயுள்ளன. இது இலங்கைக்கு ஒரு சிறந்த வாய்ப்பு என்றார்.

ஆனால் றோஹான் தளுவத்தையின் நியமனம் பற்றி இக்கட்டத்தில் முடிவாக எதனையும் கூறமுடியாது எனவும் தெரிவித்தார். [உ]

## காணாமற் போனோர்பற்றிய விசாரணை மேற்கொள்ள புதிய குழு இன்று வருகை

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதம் முதல் யாழ். பொலிஸ் நிலையத்தில் தங்கியிருந்து காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்த விசேட புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு செல்லவுள்ளதையடுத்து அவர்களின் இடத்திற்குப் புதிய விசாரணைக் குழு வரவுள்ளதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன;

காணாமற் போனோர் தொடர்பான விசாரணையினை மேற்கொள்ளும் முகமாக புதிய விசேட புலனாய்வுப் பிரிவினர் இன்று யாழ். வரவுள்ளதாகவும், அவர்கள் குடா நாட்டில் காணாமற் போனோர் தொடர்பான மேலதிக விபரங்களையும் மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

## விளக்கக் கூட்டம்

(உடுவில்)

குடாநாட்டில் தென்னைகளைத் தாக்கி வரும் நோய்கள் மற்றும் உரப்பாவனை, பூச்சி கொல்லி மருந்துப் பாவனை முறை பற்றியவிளக்கக் கூட்டமொன்றுதென்னை அபிவிருத்திச் சபையின்ஏற்பாட்டில் நாளை மு.ப 10 மணிக்கு சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம்தென்னைச் செய்கையாளர்களுக்கு மைற்ஸ்நோய்க்கட்டுப்பாட்டு மருந்தும்இலவசமாகவிநியோகிக்கப்படவுள்ளது. (உ-129)

## பரீட்சைக்கு செல்கையில் பரியோவான் கல்லூரி மாணவன் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைக்குச் செல்கையில் மாணவன் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்;

நேற்றுக்காலை கோப்பாய்

## வயிற்றோட்டம் தீவிரம்

(வவுனியா)

வன்னிப் பகுதியில் நிலவும் கடும் வறட்சிகாரணமாக அப்பகுதி மக்களிடையே வயிற்றோட்டம் தீவிரமாகப்பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நன்னீர், உவர்நீர் மீன்பிடி ஏரிகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றன. இத்தகைய ஏரிகளில் பிடிக்கப்படும் மீன்வகைகளை உண்பதன் மூலமே வயிற்றோட்டம் ஏற்படுவதாகவும்;

இந்த ஒருமாதகாலப் பகுதிக்குள 27 குழந்தைகள வயிற்றோட்டத்திற்காக மல்லாவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் வன்னி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்;

(செ)

## அலுமினியப் பாத்திரங்கள் தென்மராட்சியில் களவு

(கல்வயல்)

தென்மராட்சியில் மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் பித்தளை மற்றும் அலுமினியப் பாத்திரங்கள் களவாடப்பட்டு வருவதாகத்தெரியவந்துள்ளது.

மேற்படி பாத்திரங்கலளக் கையாடிவரும் களவர் அவற்றைச்சேதமாக்கிபின் மொத்த வியாபாரிகள் மூலம்கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(உ 111)

## நீதிமன்ற வளவில் குண்டு வெடிப்பு;12பேர் படுகாயம் இருவர் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

மத்துக்கம மஜிஸ்ரேட் நீதிமன்ற வளவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பன்னிரெண்டுபேர் படுகாயமடைந்துள்ளனர். இதில் இருவரின் நிலைமைமிகவும் கவலைக்கிடமாகவுள்ளது;

தடுப்புக்காவல் சந்தேகப்பேர்வழிகள் தப்பிச் செல்லுவதற்கு ஏதுவாகவே இக்குண்டு வெடிப்புஇடம்பெற்றதாகவும், ஆனால் எவரும் தப்பிச் செல்ல முடியாது போனதாகவும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்;

(செ)

செல்லும் ஏ.பி தர நெடுஞ்சாலை, பொதுமக்கள் பாவனைக்கு விடப்படாமல் மூடப்பட்டுள்ளதால் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் முடவன் வயல், ஆயத்தடி, முசுறி, இலுப்பையடி, வாகையடிப் பகுதி மக்கள் மீளக் குடியமர்வதிலும் தமது வீடுகளைப் பார்வையிடச் செல்வதிலும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் [உ-111]

## கருத்தரங்கு

(அரியாலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான கருத்தரங்கு எதிர் வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் தம்புள்ளையில் நடை பெறவுள்ளது:

யாழ். கிளை உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் பயணமாகியுள்ளனர்;

(செ-106)

## பற்றைகள் வெட்டித்துப்புரவு

(அரியாலை)

அரியாலையில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் வளர்ந்துள்ள பற்றைகள் யாழ். மாநகர சபை ஊழியர்களினால் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. நுளம்புப் பெருக்கத்தை தடுக்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது.

(செ-106)

பரீட்சைக்குச் செல்கையில் மாணவன் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம

---

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வராஇன்றுகாங்கேசன்துறை கைதிகள்தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார்;

அவர் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதம் உடை என்பவற்றினை எடுத்துச் சென்று கைதிகளிடம் ஒப்படைப்பார்.

மேலும் கைதிகளால் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதத்தினையும் உறவினரிடம் கையளிப்பார். (உ-10)

## நூற்றாண்டு விழா

(உடுவில்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய நூற்றாண்டுவிழா விரைவில் கொண்டாடப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் க. செல்வக்குமரன் தெரிவித்துள்ளார்:

[உ-129]

டைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்;

நேற்றுக்காலை கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகாக இடம் பெற்றஇந்தவிபத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குச் சென்றுகொண்டிருந்தபரியோவான் கல்லூரி மாணவரான செல்வரட்ணம் நந்தகுமார் (வயது 21) என்பவரே படுகாயமடைந்தவராவார்;

ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள்களே மாணவனைமோதியதாகவும் விபத்துநடந்தஇடத்தில் அவை நில்லாமல் சென்றுவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-6)

## இந்துதர்மம் நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து சமயப் பேரவையின் இந்து தர்மம் சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை மு.ப. 10.00 மணிக்கு அளவெட்டி ஸ்ரீ நாகேஸ் வரம் தேவஸ்தானத்தில் இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் இடம் பெறவுள்ளது:

சஞ்சிகையின் வெளியீட்டுரையை சங்கீத பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்துவார்.

## இன்று ஒரு தகவல்

# விந்தைச் செடிகள் பாரீர்

பேராசிரியர் தங்ஸ்டன் என்று ஒருவர் இவர் ஆங்கில அறிவியல் வல்லுநர் இவர் ஒரு முறை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அமெரிக்காவின் நடுப்பகுதியில் உள்ளகாடு அது. அவரோடு கூடஅவருடையநாயும் போய்க் கொண்டிருந்தது, சிறிது நேரத்தில் திடீரென்று ஒரு அலறல் சத்தம்அது அவருடைய நாய்க்குட்டியின்சத்தம் தான். பேராசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. எந்தத் திசையிலேயிருந்து சத்தம் வந்ததென்று பார்த்தார். அந்தத் திசையில் வேகமாக நடந்தார். அங்கே போய்ப் பார்த்தார் அவருக்குபெரும் அதிர்ச்சியொன்று காத்துக் கொண்டிருந்தது. என்ன தெரியுமா? ஒருசெடி அந்த நாய்க் குட்டியை கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பிடியிலிருந்து தப்ப முடியாமல் நாய்க்குட்டி அலறிக் கொண்டிருந்தது.

அந்தச் செடிகறுப்பாயிருக்கிறது. பசைத் தன்மை உள்ளதாக இருக்கிறது. அச்செடியின் உணவுக் கொடுக்குகள் தான் நாயைப் பிடித்துக் கொண்டிருந்தன. பேராசிரியர் மிகவும் கஷ்டப்பட்டு அந்தச் செடியிடமிருந்து நாயைப் பிரித்து எடுத்தார். அதன்பின்னர் கொஞ்ச நேரம் கூட அங்கே நிற்கவில்லை. ஆராய்ச்சியெல்லாம் செய்த வரைக்கும் போதும் என்று சொல்லித் திரும்பிவந்து விட்டார். பின்னர் விசாரித்த போது தான் அங்கே வாழ்கிற காட்டு வாசிகளே இத்தகைய செடிகளை ஆங்காங்கு வைத்திருக்கிறார்களாம் என்று அறிந்தார். இந்தச் செடிகள விலங்குகளை மட்டும் தானென்றுஇல்லைமனிதனையும் பிடிக்கிற துண்டாம் இது ஒருபேய்ச் செடி என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் தான் இதற்குப்பேய்க்கண்ணி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

பணிச் செடியென்று ஒன்று ஐரோப்பா- வடஅமெரிக்கா ஆஸ்திரோலியா, தென்னாபிரிக்கா இங்கெல்லாம்சதுப்பு நிலப்பகுதியில் இந்தவகைச் செடி நிறைய உள்ளன. இது புழு. பூச்சிகளையெல்லாம் உயிரோடுபிடித்துச்சாப்பிட்டு விடுகிறது. பூச்சி இலையிலே உட்கார்ந்தால் போதும் அதிலேயிருக்கிற பசைநீரிலேமாட்டிக் கொள்ளும் உடனே செடியிலே இருக்கிற உணர்ச்சிக் கொடுக்குகள் பூச்சியைக் கெட்டியாகப்பிடித்துக் கொள்கின்றன. பூச்சி துள்ளினால் மற்ற இலையும் கொடுக்கும் கெட்டியாக மூடிக்கொள்ளும் பூச்சியை முற்றாகச் சாப்பிடுகிற வரையும் இலை பிரிகிறதில்லை.

துருத்திச் செடியென்று ஒன்று இது ஒரு சன்னமான செடிகுளத்தில்மிதந்துகொண்டிருக்கும். இலையில்ஒருபகுதி சின்னப்பை மாதிரி இருக்கும். ஒவ்வொரு பைக்கும் ஒருகதவு உண்டு. அது உள் புறமாக வளைந்திருக்கும். பூச்சி உள்ளே போனால் அவ்வளவு தான். வெளியேவரமுடியாது பூச்சியைக் கொன்று அதன் சாற்றை அருமையாக உறிஞ்சிச் சாப்பிட்டு விடும் இந்தச் செடி அசாம் காடுகளில் ஒரு வகைச் செடி உண்டு. தாழிச் செடி என்று சொல்லலாம். இதன் இலை நிலக்கடலை மாதிரி ஒருகூடாக மாறியிருக்கும். அதிலும் ஒரு கதவுண்டு வாசனையில் மயங்கிப் பூச்சி உள்ளேசென்றுவிடும். அவ்வளவுதான் உள்ளே இதனை செரிக்க வைப்பதற்குச் செரிமான நீர் தயாராக இருக்கிறது. அடுத்த வினாடியே பூச்சி முடிந்து விடும்.

இடுக்கிச்செடியென்றுஒன்று இலை அழகாக இருக்கும். பிணைப்பதற்கு வசதியாக இருக்கும் ஒவ்வொரு இலையின் நடுப்பகுதியிலும் ஆறு உணர்வு இழைகள் உள்ளன. இலை ஓரம் பல் மாதிரி இருக்கும். இதில் ஏதாவதொரு இழையைத் தொட்டால் போதும், திடீரென்று இலை மூடிக் கொள்ளும். அவ்வளவு தான். பூச்சியைக் கொன்று சாப்பிட்டு விடும். ஆபிரிக்காவிலே மணந்து கொல்லிஎன்று ஒரு செடி வெள்ளைப் பூ பூக்கும், வாசனையாக இருக்கும் பூச்சி ஆசையாக உள்ளே போய் தேனைக் குடிப்பதற்கு முயற்சி செய்யும். அதற்குள் செடி பூச்சியைச் சாப்பிட்டு விடும், ஆஸ்திரேலிய விவசாயிகள் அவர்களுடைய பழத் தோட்டத்தில் இந்தச் செடியைப் பயிர் செய்வார்கள்.

செடிகள் விலங்குகளைப் பிடிக்கின்றன. சரிமனிதனைப் பொறுத்தவரைக்கும் அவன் இன்னொரு மனிதனை பிடிக்கிறதற்கு எப்பவும் தயார். கொடுக்கிறதற்குத் தான் யோசிப்பானே தவிர, பிடிக்கிறதற்கு யோசிக்க மாட்டான். ஒருகஞ்சன் ஆற்றோடு வெள்ளத்திலே போய்க் கொண்டிருக்கிறான். கரையிலிருக்கிற ஒருவன் அவனைக் காப்பாற்ற முயற்சி செய்கிறான். கஞ்சனைப் பார்த்து உன்கையைக்கொடு, கையைக் கொடு என்று கத்தினான். அவன் கொடுக்க வில்லை. கஞ்சனுக்கு எதையும்கொடுத்துப் பழக்க மில்லை. அதனால் கையைக் கொடுக்கிறதற்கும் மனது வரவில்லை. ஆற்றோடு போய்க் கொண்டேயிருக்கிறான். கரையில்இருக்கிறவன் யோசித்து சரி! என்கையைப் பிடி என்கையைப்பிடி என்று சொன்னான். கஞ்சன்உடனே கப்பென்று பிடித்துக்கொண்டான். உடனே இவன்இழுத்துக் கரையிலே போட்டு விட்டான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சாவகச்சேரி

# நகரசபை இயங்குவது உடனடிச் சாத்தியமில்லை

(கல்வயல்)

சாவகச்சேரி நகரசபையை மீள இயங்கவைப்பது தற்போதைக்குச் சாத்தியப்படாதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

முன்னர் நகரசபைஇயங்கிய கட்டடம் உட்பட அங்கிருந்த பெரிய கட்டடங்கள் அனைத்தும் அண்மைக்கால போர் அனர்த்தங்களினால் சேதமாகியிருப்பதையடுத்தே நகரசபையை மீள இயக்குவது கேள்விக்குறியாகியுள்ளது.

இதனால் நகரசபைக்கென புதிதாக கட்டடம் அமைக்க வேண்டியதேவை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சாவகச்சேரி சந்தையைப் புனரமைக்க பல கோடி ரூபாய் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-111)

## ஊதியத்தில் பாதி நாட்டு நலனுக்கு

# ஜே. வி. பியின் இந்த நிபந்தனை நடைமுறைச் சாத்தியமற்றது

## பட்டிவீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

''தகுதிகாண் அரசிற்கு'' ஜே.வி.பி.ஆதரவு அளிப்பதற்கான நிபந்தனைகளில் அரச கூட்டுத் தாபனம் மற்றும் சபைகளின் தலைவர்களும், அமைச்சர்களும் தமது சம்பளத்தில் ஐம்பது சத வீதத்தை நாட்டின் நன்மைக்காக மீளளிக்க வேண்டுமென்பதும் ஒன்றெனத் தெரியவருகிறது.

எனினும் இந் நிபந்தனையில் ஜே வி. பி. கடும் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் இந் நிபந்தனை குறித்து கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் பட்டிவீரக்கோன் சம்பளக்கொள்வனவில், ஐம்பது வீதத்தை மீளளிப்பதென்பது நடைமுறைக்குச் சாத்தியப்படாதெனக் குறிப்பிட்டார். (ந)

## மணவாளக் கோல விழா

(புலோலி)

கரவெட்டி கப்புதூ வீரகத்திப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோலத்திருவிழா இன்று நடைபெறும்.

இத் திருவிழாவை யொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பஜனைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இன்று நடைபெறவுள்ளது. (செ-52)

## கும்பாபிஷேகம்

(அரியாலை)

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மாளிகைத்திடல் கண்ணகை அம்மன்ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ இ. குமாரசாமிக் குருக்கள தலைமையில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (செ-106)

## தேர்த்திருவிழா

(அரியாலை)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான தேர்த்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 10.45 மணிக்கும தீர்த்தத்திருவிழா மறுநாள் 10.30 மணிக்கும இடமபெறும். (செ-106)

★ ★ ★

(அரியாலை)

யாழ். கோப்பாய் ஸ்ரீசக்கராழ்வார் ஆலய தேர்த்திருவிழா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழா 10 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன. தீர்த்தத் தினத்தன்று மாலை 4.00 மணிக்கு மாவிளக்கு இடுதல் திருவூஞ்சல் என்பனவும் நடைபெறும். (செ-106)

## திருநாள் திருப்பலி

(அரியாலை)

மல்லாகம் புதுமைமாதா ஆலய இறுதித் திருவிழா 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். வருடாந்த திருவிழா 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (செ-106)

★ ★ ★

(அரியாலை)

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. திருநாள் திருப்பலிதிருச்சொரூப தேர்ப் பவனி சொரூப ஆசீர்என்பனவற்றுடன் திருவிழா நிறைவுறும். (செ-106)

# நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திர விவாதம்

(கொழும்பு)

நாளை இடம்பெறவுள்ள நாடாளுமன்ற நடவடிக்கைகளை தயாரிக்கும் ஒழுங்கு பத்திர விவாத நிகழ்வொன்று பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் சபாநாயகர் அனுராபண்டார நாயக்கா தலைமையில் நடைபெற்றுள்ளது.

நேற்று பகல் நடைபெற்ற இவ் விவாதத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச தரப்பு பிரதிநிதிகளாக றிச்சட் பத்திரன, றெஜி ரணதுங்கா மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவாதத்தில் கலந்து கொண்டுரையாற்றிய றிச்சட் பத்திரன அரசுக்கே பெரும்பான்மை பலம் உள்ளதால் பத்திரத்தை தயாரிக்கும் உரிமை ஆளும் கட்சிக்கே உரியது என்று தெரிவித்தார்.

இதற்கு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் இப் பத்திரம் தயாரிக்கும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தைக் கூட்டிவிட்டு பின்னர் அரசு ஒத்திவைக்கக் கூடாதென்று மதத் தலைவர்கள் சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

# தென்மராட்சிப் பகுதிக்கு சிற்றூர்திச் சேவை நடத்தக் கோரிக்கை

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதிக்கு மீண்டும்சிற்றூர்திச் சேவையை ஆரம்பிககவேண்டுமென அங்கு மீளக்குடியமரும் மக்கள் தென்மராட்சி சிற்றூர்திச்சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிக்கு பேருந்து சேவை மாத்திரமே தற்போது இடம்பெறுவதால் மீளக்குடியமரச்செல்லும் போது தமது பொருட்களை எடுத்துச் செல்வதில் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தவிர்க்கும் வகையிலேயே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். (உ-111)

# அர்ஜுன ரணதுங்கவிற்கு 10 இலட்சம் அபராதம்

(கொழும்பு)

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சொகுசு வாகனம் ஒன்றை இறக்குமதி செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கு கொழும்பு துறைமுக நீதவான் 10 இலட்சம் ரூபாவை அபராதமாக விதித்தார்.

இந்த அபராதத் தொகையை அர்ஜுன செலுத்திய பின்னரே வாகனம் அவர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இம் மோசடியுடன் தொடர்புடைய சுங்க அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# விருது பெறத்தகுதியான முதியோர் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு இடம் பெறவுள்ள வயோதிபர் தின விழாவில் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் வகையில் 90 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விபரங்களைதிரட்டுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை சமூக சேவைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக கிராம அலுவலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் முதியவர்களை தேர்வு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

# கலகத்தை அடுத்து மூடப்பட்ட கலைப்பீடம் இன்று மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த 31 ஆம் திகதிவரை மூடப்பட்டிருந்த கொழும்பு பல்கலைக்கழகக் கலைப்பீடம் இன்று திறக்கப்படும் என்று கொழும்பு பல்கலைக்கழகபதிவாளர் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து கலைப்பீட மாணவர்கள் அனைவரும் தமது விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த இரு மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலையடுத்தே கலைப்பீடம் மூடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

# திரிபுராவில் தீவிரவாதக் கும்பல் வெறியாட்டம்; அறுவர் படுகொலை

## சொத்துக்களையும் தீ மூட்டினர்

(புதுடில்லி)
திரிபுராவில் மாக்சிஸ்ட் கட்சித் தலைவர் நிரேந்திரா, அவரது மனைவி உட்பட 6 பழங்குடி மக்களையும் திரிபுரா மாநில தீவிரவாதக் கும்பல் சுட்டுக் கொன்றுள்ளது.

திரிபுரா மாநில தென்புலத்திலுள்ள கிலோ என்னுமிடத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிலோவிலுள்ள மாக்சிஸ்ட் கட்சித் தலைவர் நிரேந்திராவின் வீட்டுக்குள் இரகசியமாகப் புகுந்த தீவிரவாதிகள், தூங்கிக் கொண்டிருந்த நிரேந்திராவையும், அவரது மனைவி அனுபாலாவையும் சுட்டுக் கொன்றார்கள்.

பின்பு அடுத்த வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்த பழங்குடியினர் நால்வரையும் சுட்டுக் கொன்றனர்.

தீவிரவாதிகள் கிராமத்தை விட்டு வெளியேறும் போது குடிசைகளுக்குத் தீ மூட்டிச் சென்றனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் பள்ளி ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதிகளைத் தேடும் பணியில் பொலிஸார் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

(து)

# ஏடன் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர் ஆர்ப்பாட்டம்

(ஏடன்)
ஏடன் துறைமுகத்தில் யேர்மன் நாட்டு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள், தம்மை யேர்மன் நாட்டிற்குள் அனுமதிக்கவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் படகுகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போதும் கடலில் குதித்து நீந்தியே கரைக்குச்சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கலகம்அடக்கும்பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து ஆர்ப்பாட்டக்காரர்களை மீண்டும் படகுகளிற்கு அனுப்பிவைத்தனர்.

இதேவேளை, இப்படகுகளில் இருந்த இருவர் தப்பிவிட்டதாகவும், இவர்கள் எந்தநாடுகளுக்குச் செல்லுகின்றனர் என்ற தகவலையும் வழங்கமறுத்துவிட்டதாகவும் யேர்மன் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். (செ)

# பிஜி அரசியலில் இந்திய வம்சாவளியை ஓரங்கட்ட திட்டம்

(சுபா)
பிஜியில் இந்திய வம்சாவளியினர், அரச பதவிக்கு வருவதைத்தடுக்க அந்நாட்டு கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன.

தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கிடையில் பிஜியின் தலைநகரில்இந்தியவம்சாவளியினர் அங்கம் வகிக்காத கட்சிகள் ஒன்றிணைந்து இது தொடர்பாக கூட்டம்நடத்தியுள்ளன.

கூட்டுச்கட்சிகள் தங்களுக்குத்தான் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்குமென்று கருத்துத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, முன்னாள் இந்தியவம்சாவளி பிரதமர் மகேந்திர செளத்திரியின்கட்சியான தொழிலாளர் கட்சி தங்களுக்குத்தான் பெரும்பான்மை கிடைக்குமென்று தெரிவிக்கின்றது. (து)

## தற்கொலை குண்டுத்தாக்குதல்

(ஜெருசலேம்)
மத்தியகிழக்கில் ஜெருசலேமின் மேற்குப் பகுதியில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் பதினொரு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. [செ]

## உள்ளூராட்சித்தேர்தல் ஒக்டோபரில்

(சென்னை)
தமிழ் நாட்டின் உள்ளூராட்சித் தேர்தல் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட இருக்கின்றன.

முதற் கட்டத் தேர்தல் ஒக்டோபர் 16ஆம் திகதியும், இரண்டாம் கட்டம் ஒக்டோபர் 18ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளதாக மாநில தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார். (து)

## இஸ்ரேல் மீது கண்டனம்

# டர்பன் மாநாட்டில் இருந்து அமெரிக்காவும் வெளியேற்றம்

(டர்பன்)
தென்னாபிரிக்க டர்பனில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் இன வாதம் பற்றிய மாநாட்டிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது.

மாநாட்டில் பல நாடுகள் இஸ்ரேலை இன வெறி நாடென வர்ணித்ததையடுத்து அமெரிக்கா, வெளிவிவகார அமைச்சர் குழுவைத் திருப்பி அழைத்துள்ளது.

153 நாடுகள் பங்கு கொள்ளும் இனவாத எதிர்ப்பு மாநாட்டில் இஸ்ரேலின் போக்கு கண்டிக்கப்பட்டதுடன், அது ஒரு இன ஒதுக்கல் நாடாக இருக்கிறது என்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் மகாநாடும் எடுத்துரைத்ததால் இஸ்ரேல் மாநாட்டை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகளுக்கிடையே கருத்து மோதல்கள் எழுந்துள்ளன. [து]

# 80 குழந்தைகளுக்கு பால்ய விவாகம்

(புதுடில்லி)
ராஜஸ்தானில் 80 குழந்தைகளுக்கு ஒரேநேரத்தில் திருமணம் நடந்திருக்கிறது.

குழந்தைத் திருமணத்திற்கு ராஜஸ்தான் மாநிலம்தடைவிதித்த போதிலும் விநாயக சதுர்த்தி இறுதி நாளன்று ஒரே இடத்தில் விதிப்படி திருமணம் நடந்துள்ளது.

சில குழந்தைகள் பெற்றோரது மடியில் தூங்கிக் கொண்டிருக்கும் போதே தாலி கட்டப்பட்டதாகவும், மணமக்கள் ஊர்வலங்கள் மேளதாளத்துடன் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# வெறுப்புற்ற மக்கள் வியட்நாமில் இருந்து தப்பியோட்டம்

(ஹனோய்)
வியட்நாமிலிருந்து 114 மலைவாழ் மக்கள் தப்பியோடிக் கம்போடியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வியட்நாம் மத்திய மலைப் பகுதியிலுள்ள கிராமங்களில் வாழ்ந்த இம் மக்கள் சொந்தக் காணியோ, வீடோ, மத சுதந்திரமோ இன்றி மிகவும் துன்பப்பட்டதாலேயே தப்பியோடித் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

இற்றைவரை 400 க்கு மேற்பட்டோர் இவ்வாறு தப்பியோடி வியட்நாம் எல்லைப் பகுதி ஐ. நா. அகதி முகாம்களில் வாழ்கிறார்கள்; இவர்கள் எல்லோரும் கம்போடியபிரஜைகள் ஆவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [து]

# தென்கொரிய அமைச்சர்கள் அத்தனைபேரும் இராஜினாமா

(சியோல்)
தென்கொரியஅமைச்சரவை முழுமையாக இராஜினாமாச் செய்துள்ளது.

தென்கொரிய அதிபர் கிங்டோ விம்மினது இரு கொரியாக்களையும்இணைக்கும் முயற்சியில் முக்கிய பொறுப்பு வகித்த அமைச்சர் லிங்டோன்வானமை அந்நாட்டு நாடாளுமன்றம்விலக்கியதை அடுத்தே அமைச்சர்கள் அத்தனைபேரும் இராஜினாமாச் செய்துள்ளனர்.

இதேவேளை, இடதுசாரி உறுப்பினர்கள் சிலர் வடகொரியாசெல்வதற்கு அமைச்சர் லிங்டோன் அனுமதி அளித்ததையடுத்து, தென்கொரிய நாடாளுமன்றம் லிங்டோனை பதவி விலக்கும் தீர்மானம்ஒன்றைக்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (து)

## ராமர்பிள்ளையின்

# பெற்றோலில் புற்று நோய் ஏற்படும் சாத்தியம்

## விஞ்ஞானி சாட்சியம்

(சென்னை)
ராமர் பிள்ளை கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்பட்ட மூலிகைப் பெற்றோலில் புற்று நோய் உண்டாகக் கூடிய ஒருவகை அமிலம் கலந்திருக்கிறது.

இவ்வாறு ஐ. டி. ஐ. விஞ்ஞானி ஒருவர் சி. பி. ஐ. கோர்ட்டில் சாட்சியமளிக்கும் போது தெரிவித்துள்ளார்.

ராமர் பிள்ளை மூலிகையைப் பயன்படுத்தி கண்டுபிடித்திருப்பது உண்மையிலேயே பெற்றோல் இல்லை என்றும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். (மச)

## உலக தரிசனம்

## முதல்வர் ஜெயலலிதா

# குருவாயூரனுக்கு யானை கொடுத்து கருணாநிதியைச்சிறையில்வைத்தார்

(சென்னை)
தன்னுடன் தேர்தலில் நின்று தோல்வியுற்றவர் சிறை செல்லவேண்டும் என்று நேர்த்திவைத்தே குருவாயூர் அப்பனுக்கு முதல்வர் ஜெயலலிதா யானையைக் காணிக்கையாகக் கொடுத்தாராம். பி.பி.சிக்கு கொடுத்த பேட்டியில் ஜெயலலிதாவே இதைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தி.மு.க உறுப்பினர் பொன்முடி சட்டசபையில் கூறினார்.

நம்பூதிரியின் சொற்படியே யானையைக் கோயிலுக்குக் கொடுத்ததாகவும், தான் நேர்த்தியை நிறைவேற்றிய சில நாட்களில் எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வி கண்ட கருணாநிதி சிறை வைக்கப்பட்டார் என்றும் ஜெயலலிதா அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாக பொன்முடிமேலும்கூறினார்.

அவர் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், சட்டசபையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டு தி.மு.க.வினர் சபையை விட்டு வெளியேறிய பின் பொன்முடி பத்திரிகையாளர்களுக்கு மேற்படி தகவல்களைத் தெரிவித்தார். (து)

## குடிசார் எந்திரவியல்

# கற்கைநெறி மாணவர்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் குடிசார்எந்திரவியல் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய மற்றும் குடிசார் எந்திரவியல் இறுதிவருடம் கற்கும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக வடக்கு-கிழக்கு தொழில்நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்கள பிரதிப் பிராந்தியப்பணிப்பாளர்என். யோகராஜன் தெரிவித்தார்.

மேற்படி தகைமை பொருந்திய மாணவர்களை ஜீ. சிவபாலன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு சான்றிதழ்களின் பிரதிகளை ஒப்படைக்குமாறும் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-6)

# விஞ்ஞானமும் தொழிநுட்பமும் செயலமர்வு இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 7தொடக்கம் 11வரை விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு 7ஆம் திகதிவெள்ளிக்கிழமை யாழ். கோட்டப்பாடசாலைகளிற்கும் 8ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளிற்கும் இச் செயலமர்வு இடம் பெறவுள்ளது.

ஏற்கனவே அறிவித்தபடி கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகள் இரு நாட்களிலும்கொத்தணி ரீதியாகப் பங்கு பற்றுதல் வேண்டும் எனவும் மேற்படி ஆசிரியர்கள் தவறாது பங்குபற்றுதல் வேண்டும் எனவும் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

ஆற்றின் அளவறிந்(து)
ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி
- குறள்

# வலம்புரி

## நம்பிக்கை இல்லாத வியாதி

இலங்கையின் அரசியலில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நீண்ட காலத்து வியாதி. எதற்கெடுத்தாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோமெனப் பயமுறுத்தும் பண்பாடு ஜனநாயகத்தின் ஆயுளுக்கு அச்சுறுத்தலாகவேயுள்ளது. நாட்டில் மாறி மாறி ஆட்சிப்பீட மேறும் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டிலும், நம்பிக்கையில்லா வியாதி இருப்பினும், ஐ. தே. கட்சியில் அவ்வியாதி சற்று அதிகமென்பதே அரசியல் மருத்துவர்களின் அபிப்பிராயம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்திற்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதன் போது ஐ. தேசியக் கட்சியின் அமைச்சராக இருந்த சிறில் மத்யூ வாலிவேஷம் பூண்டிருந்ததால் காலிமுகத் திடலில் அமிர்தலிங்கத்தைக் கட்டியிழுப்போமெனக் கங்கணம்கட்டினார். சிறிலின்இனத் துவேஷப்பாட்டுக்கு அப்போதைய பாணந்துறை எம். பி. நெவில் பெர்னாண்டோ தாளம் போட்டார்.

சிங்களப் பாராளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை, இப்போதைய ஆளும் கட்சி அன்று எதிரணியிலிருந்து வேடிக்கை பார்த்தது.

ஆனால் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றில் மிக மலிந்துவிட்டது. ஜனாதிபதி மீதுநம்பிக்கையில்லை -பிரதம நீதியரசர் மீது நம்பிக்கையில்லை - அரசு மீது நம்பிக்கையில்லை- அமைச்சர் மீது நம்பிக்கையில்லை, இப்படியே நம்பிக்கையில்லாப் பட்டியல் நீண்டு செல்கிறது.

இதில் அதிசயமென்னவெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், சபாநாயகருமான அனுரா பண்டாரநாயக்கா மீதும் இப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு நம்பிக்கையில்லையாம்.

அனுராவைசபாநாயகர் பதவிக்கு நிறுத்திய ஐ.தே.க வுக்கு அவரிலும் நம்பிக்கையில்லையெனில் ஒட்டு மொத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் அறிவில் நம்பிக்கையில்லை எனப் பிரேரணை கொண்டு வருவதே சாலப் பொருத்தம் போல் தெரிகிறது.

# கண்ணன் அருளால் அற்புதங்கள் பல புரிந்த ஸ்ரீஇராகவேந்திரர் ஒரு சிறந்த வைணவர்

இவர் வைஷ்ணவ சம்பிரதாய மரபுவழி வாழ்ந்தவர்: இவர்தந்தை 'திம்மண்ணபட்' என்பவர். தாய் கோபிகாம்பா ஆவார். இராகவேந்திரர் கும்பகோணத்தில் வேதக்கலைகள் பயின்று வித்தகராயினார். குடும்ப முறைப்படி சரஸ்வதிபாய் என்பவரை மணந்தார். இவரது இறைபக்தி, வேத நூல் பயிற்சிகள் மற்றும் சகல வல்லமைகளையும் உணர்ந்து சுவாமி சுதீந்திரர் தமது மடத்துத் தலைமைப் பதவியை இராகவேந்தரே வகிக்கப் பொருத்தமுடையவர் என்றுணர்ந்து அப்பதவியை ஏற்கும்படி கேட்டார்.

### நவாப்பின் சோதனை

இராகவேந்தரதுசமய அறிவு பேராற்றல்கள் -;கல்வித்திறன் ஆகியவற்றால் அவர் தஞ்சை இரகுநாத பூபாலர் முன்பு 1600-1680 ல் துறவு பூண்டு இறைபக்தியில் திளைத்திருந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் 'வெங்கண்ணப் பட்டர்' பின்பு துறவியானதும் இவரது திருநாமம் 'இராகவேந்திரா' என்றாயிற்று. இவர் அக்காலம் பல தேவஸ்தலங்கட்கும் பாத யாத்திரை செய்து ஈற்றில் 'ஆதோளி' என்ற இடத்தை அடைந்ததும் ஆங்கு இவரது ஆத்மீக வாழ்வுச் சிறப்பைக் கேள்விப்பட்ட 'நவாப்புசித்தி-மதிகூதனன் இவரைச் சோதிக்க எண்ணித் தமது மாளிகைக்கு அழைத்து வரவேற்று வெள்ளித்தட்டு ஒன்றில் புலாலுணவை இவருக்கு அளித்துபசரிக்க எத்தனித்தார். அப்புலாலுணவு தாங்கிய வெள்ளித்தட்டை இராகவேந்திராவிடம் அவர் கையில் கொடுத்தார்.

இராகவேந்திரர் இப்பரீட்சையை - ஞானதிருஷ்டியால் உணர்ந்து, அப்புலாலுணவு தாங்கப் பெற்ற வெள்ளித் தட்டின் மேல் தண்ணீர் தெளிந்து மந்திரோத்தாடணஞ் செய்து வெள்ளித்தட்டு மூடியைத் திறந்தார். - அத்தட்டு நிறைய பழங்களும், மலர்களும் நிறைந்து காணப்பட்டன. முன் வெள்ளித் தட்டினுள் வைக்கப்பட்டிருந்த புலாலுணவு ஆங்கில்லை. நவாப்பு மனஅதிர்ச்சியுற்றுத் தமது குறையை - பிழையை மன்னித்தருளுமாறு கேட்டிரந்து தமது ஊரான 'துங்கபத்திக் கரையில் இருந்த மந்திராலயம்' என்ற சிற்றூரை இராகவேந்திரருக்குத் தானமாக வழங்கினார்.

அந்த இடத்தில் தான் இராகவேந்திரர் 'பிருந்தாவனத்தை' அமைத்து பல தொண்டுகள் செய்து-அருளாட்சி புரிந்து 1671ல்ஆவணி மாசத்து கிருஷ்ணபட்சத் துதியைத்திதியில் வியாழக்கிழமை ஹரிபஜனை செய்து சமாதி நிலையடைந்தார் பிருந்தாவனத்தில்,

### அற்புதங்கள்

இராகவேந்திரர் - அவர்தம் இறைவாழ்வில் பல அற்புதங்கள் செய்தவர்; படிப்பறிவில்லாத மாட்டிடையன் ஒருவனை இராகவேந்திரர் தமது ஆசீர்வாதத்தால் படித்தமேதையாகதிடீரெனஆக்கியவர். நவாப்பரசின் சமஸ்தானத்தில் இராகவேந்திரர் 'திவானாகப்' பதவிவகித்துவந்தவர் தஞ்சை மன்னரது குலகுருவுமாக இராகவேந்திரர் இருந்து வந்தவர்.

சங்கீத பூஷணம்

## பே. சந்திரசேகரம் எம். ஏ

இராகவேந்திரர் பல ஞான சாஸ்திர நூல்கள் எழுதியவர். 'மத்துபாஷியத்திற்கு' பதவுரையும், பகவத் கீதைக்கு தெளிவுரையும், 'பரிமளம்' என்ற நியாய சூத்திரத்திற்கு விளக்கவுரையும் எழுதியவர். 'ராகவேந்திரருக்கு' பரிமளாச்சாரியார் என்ற பெயரும் வழங்கப்பட்டது. மற்றும் தத்துவமஞ்சரி - பட்டர்சங்கிரகம் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். இப்பேர்ப்பட்ட மகான் 'ராகவேந்திரர்' கண்ணபரமாத்மாவின் அம்சமாகப் பிறந்தவர்.

இவர் பெரும் அருளாளர், சைவ சமய குரவர்கள்-நாயன்மார்களைப் போல வைஷ்ணவ சமயத்தவராகப் பிறந்து மண்ணுலக மக்களை வழிப்படுத்த கண்ணபரமாத்மாவே - மனித உருவில் தோன்றியவராக இருந்து வந்தவர். அருணகிரிநாதர் 'கோமதித்தாய், மார்க்கண்டேயர், சாவித்திரி, கண்ணகி ஆகியோருக்கு யமன்அஞ்சினான்:

பாரதத்தில் கண்ணன், இராமாயணத்தில் இராமன் புகழ் சொல்லப்படுகிறது; சாதாரண மனித வாழ்க்கைக்குமறபாற்பட்ட பல தெய்வீக அம்சங்களைப் பெற்றஅருவாளர்கள்நம்நாட்டிலும் அவதரித்துள்ளனர்.

குந்திதேவிக்கு மந்திரம் சொல்லிக் கொடுக்ககர்ணன் பிறந்தார். திரௌபதையின் துகிலை உரிய, உரிய அத்துகில் கண்ணன் அருள்நோக்கால் திரௌபதையின் உடலில்இருந்து-; அத்துகில்நீண்டு கொண்டே போனது கண்ணனது இத்தகைய லீலாவிநோதங்கள் திருவருட் செயற்பாடுகளை நாம் எளிதில் உணர்ந்தும் உணராமலிருந்து வருகிறோம். இன்ப துன்பம்இரண்டினதும் எல்லையைக் கடந்த கண்ணபிரானின் அருட்பார்வை நமக்குக் கிட்டினால் நாம்வாழ்வில் பல இன்பசுகங்களைப் பெறலாம் எல்லாமே நமக்கு நன்மைபயக்கும்.

### பாசவுணர்வு

அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்தது 'பகவக்கீதை' சாதாரண மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட பல சம்பவங்கள் பலவுள இதிகாசங்கள் பல சமய இலக்கியங்களே யாகும். பாண்டவர் செய்தது அறப்போர், கௌரவரது யுத்தம் மறப்போர், தர்மம் என்றும் வெல்லும். அதர்மம் அழிவுக்கே வழிகாட்டும் தந்தை மகன் பாசத்திற்கு தசரதன் இராமனும், சகோதர பாசத்திற்கு இலக்குவனும் நண்பருள் கர்ணனும் தாய்ப்பாசத்திற்கு குந்திதேவியும் உரியவர்கள். மனித குலத்தைக் காக்ககண்ணபிரான்போன்ற தெய்வம் வேண்டும். கலியுகத் தெய்வம் கந்தன் கண்ண பரமாத்மாவின் மருகன் கண்ணபரமாதிமாவின் திருவருட் பார்வையால் கண்ணனோடு இரண்டறக் கலந்தவர் ராகவேந்தர்.

'வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள வைக்கப் கப்படும்'

எல்லோரும் இன்புற்றுவாழ யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலய கோவில் வீதியில் 'ராகவேந்திரர் சமித்தியில் ராகவேந்திரர் நினைவுவிழா இந்தவாரம் ஐந்து தினங்கள் தொடர்ந்து கொண்டாப்படுகிறது. நல்லூர் முருகன் கோவிலைச் சுற்றி இப்படியான முறைகளில் பல தெய்வீக விழாக்கள் வருடா வருடம் நடைபெற்று வருவது நாம்கண்டு இன்புறத்தக்கது. யாழ்ப்பாணம் சிவபூமி என்றேதிருமூலர்சொல்கிறார் நாம் இச்சிவபூமி யாழ்ப்பாணத்தில் நல்லூரில் வாழக் கிடைத்தது பூர்வ புண்ணிய பலனேயாகும்.

### நல்லூரில்

சைவசமயமும் வைஷ்ணவமும் ஒத்த கருத்துக்களையுடையன. ராகவேந்தர் வைஷ்ணவத்தை கண்ணபரமாத்மாவைதமது வழிபாட்டு தெய்வமாகக் கொண்டவர். கண்ணபரமாதிமாவின் வாரிசாக அவர்தம் தூதுவராக மக்களைக் காப்பாற்றப்பிறந்தவர் மானிட உருவத் தாங்கியவர் ராகவேந்தரர் ராகவேந்திரபூஜைக்கிரமம் தோத்திர மந்திர ஸ்வரூபக்கிரமங்கள் தனித்துவம் பெற்றவை அப்பெருமானதும் அவரைப் பற்றியதுமான பஜனைப் பாடல்கள் மணியும் ஒளியும் போல இசையும் மந்திர சொரூப மொழியும் வேறுபட்டுப் பிரிவதில்லை.

நல்லூரில் ராகவேந்திரா சமித்தியில் நடக்கும் பூஜைகளில் அக்கோவிலை நிர்வகிக்கும் குடும்பம் அதாவது கணவர், மனைவி, பிள்ளைகள் அத்தனைபேரும் ஒருங்கு சேர்ந்து ராகவேந்திர சுவாமிகளது பூஜையின் போது ஜெபிக்கும மந்திர நாம் ஒலி ஓசை' அப்பூஜைக்குவரும்மக்கள் அனைவரது மனங்களையும் கவர்ந்திர்க்கிறது: அக்குடும்பம் கண்ணபரமாத்மாவின் அநுக்கிரகத்தை முழுமையுமாகப் பெற்றவர்கள் போல்தெய்வம்சம் பெற்றவர்களாக நமது கண்களுக்குத் தோற்றப்படுகின்றனர் இதுவும் நல்லூரில் யாழ்ப்பாணத்திலோர் அதிசயமே கண்ணன் திருவிளையாடலேயாகும். □

## கொக்கட்டிச்சோலையில் சிலை திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் கடந்த ஜூன்மாதம் 14ம்திகதி கிளைமோர்த்தாக்குதலில் பலியான விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் லெப்டினன்ட்கேணல்நிஷாமின் சிலை கொக்கட்டிச்சோலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ரமணன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் மட்டு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் சிலையினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் மணலாறு விஜயன் மாஸ்டர், மட்டு: அம்பாறை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் விசு, றெஜி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (வ)

## திவ்வியன் கைது விவகாரம் மற்றைய சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் திவ்வியன் கைது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட திருநெல்வேலி தொலைத்தொடர்பு உரிமையாளர் மகேந்திரநாதன் சங்கர் யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

தனது உடல் நிலை பாதிப்படைந்துள்ளதாக சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்ததைஅடுத்துயாழ். போதனா வைத்தியசாலையில் அவரை பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் வைத்தியசாலையில் தங்கி உள்ளக சிகிச்சை பெற வேண்டியிருப்பின் அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் தொடர்பான வைத்திய அறிக்கையை இம் மாதம் 6ம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறுயாழ். போதனா வைத்தியசாலை சட்ட அதிகாரிக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைப் பார்வையிட சந்தேக நபருக்கு நீதிவான் அனுமதி வழங்கினார். (க- 06)

## தினசரி தியானம்

### மொக்கு

பாசம் போய் நின்றவர் போற்
பாராட்டியானாலும்
மோசம் போனேன் நான்
முறையோ பராபரமே

-தாயுமானவர்-

மொக்கு போன்ற மனது இறைவணக்கத்துக்கு உதவாது.

மொக்கு தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறது. பரிபாகம் ஆகாமையே அதற்குக் காரணம், மலரோ தன்னை உலகுக்கு அளிக்கிறது. அது பக்குவத்தின் விளைவு, முகமலர்ச்சியுடையான் உலகுக்குரியவன் ஆகிறான். பின்பு அவன் இறைவனுக்கே தன்னை ஒப்படைத்து விடுகிறான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# பொ.ஐ.ஐ.மு- ஜே.வி.பி. கூட்டினால் மக்கள் நன்மையடையபோவதில்லை

## ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

நாளை 6ம் திகதி பாராளுமன்றம் கூடும் போது. அரசிற்கெதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைத்தல்; பிரதம நீதியரசருக்கெதிரான குற்றச் சாட்டுப் பிரேரணை என்பன தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வலியுறுத்துவதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டிடத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை வகித்தார்:

மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே. வி. பி) அரசாங்கம் இணைந்து இடைக்காலக் கூட்டரசாங்கம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்தியுள்ளார். இந்த கூட்டரசாங்கத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு எந்தவித மான நன்மையும் விளையப் போவதில்லை.

நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்கவே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது. சந்திரிகா அரசைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சிலரைத் தம்பக்கம் இழுக்கலாமென பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு எண்ணுகிறது: அத்தகைய துரோகச் செயலைச் செய்வதற்குத் தற்போது எவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். (வ)

### பாராளுமன்

பெற்றபோது: நாளைநடைபெற விருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் எடுத்துக் கொள்ளப்பட விருக்கும் விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டது கட்சித்தலைவர்களும்மீண்டும் வியாழக்கிழமைபிற்பகல்கூடி ஆராயப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# கொழும்பு துறைமுகத்தை அண்டிய மாடிக் கட்டிடங்களை உடன் அகற்றவும்

## கொழும்பு மாநகரசபை உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தை சுற்றி பாதுகாப்பு வேலிகளை அண்மித்திருக்கும் குடியிருப்பு மாடிக் கட்டிடங்களையும் புகை போக்கிகளையும் அடுத்த இரு வாரங்களுக்குள் அப்புறப்படுத்துமாறு கொழும்பு மாநகரசபை அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தள தாக்குதலையடுத்து கொழும்புத் துறைமுகப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலினாலேயே இக் கட்டிடங்களை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக மாநகரசபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இப்பாவத்தை சந்தியிலிருந்து டொக்லண்ட் சந்தி வரை துறைமுகத்தை அண்டியுள்ள குடியிருப்பு வீடுகளையும் மாடிக் கட்டிடங்களையுமே அகற்றுமாறு மாநகர சபை அறிவித்துள்ளது.

அத்துடன் வீடுகளின் சமையல் அறைப்புகை போக்கியில் துறை முகத்தை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ள துவாரங்கள், துறைமுகப்பக்கமாக உள்ள ஜன்னல்கள் அனைத்தையும் அகற்றுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

இதேவேளை கொழும்பு புறக்கோட்டைப் பகுதியிலிருந்து டொக்லன்ட்சந்திவரை துறை முகத்தைச் சுற்றிசுமார் 30அடி உயரமானபாதுகாப்பு கம்பி வலைகள் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன:


INFORMATION TECHNOLOGY PARK

தகவல் தொழில் நுட்பப்பூங்கா

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 - 3641E- mail: itp@sltnet lk

✶ A/L பரீட்சை எடுத்துக்கொண்டிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 10ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

✶ இம்முறை அரச அங்கீகாரத்துடன் கூடிய Diploma பயிற்சி நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் அதில் இணைந்து பயன்பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

★ கற்கை நெறிகள் பதிவு செய்வதற்கானஇறுதித் திகதியும் 10. 09. 2001ஆகும்.

கடந்த பிரிவில் பதிவுகளை மேற்கொண்டு கற்கை நெறிகளைத் தொடரத்தவறிய மாணவர்களுக்கு தற்போது ஆரம்பிக்கப்படவிருக்கும் பிரிவில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

மாணவ மாணவிகளே!

அரச சான்றிதழ் ஒன்றைப்பெற்று உங்கள் எதிர்காலக் கணனிவேலைவாய்ப்பினை இலகு


### அரசு.புலிகள்

ளர்ஒருவர் கேட்டகேள்விஒன்றுக்குப் பதிலளித்தபோதே ரில்வின்சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது.

தகுதிகாண் அரசாங்கம் செயற்படும் காலத்தில் யுத்தம் நிறுத்தம் செய்யப்பட்டு இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்வுகாணப்படும்:

யுத்தநிறுத்தம் செய்வதென்பது தனிய விடுதலைப் புலிகளையோ அல்லது அரசாங்கத்தையோ சார்ந்த விடயமல்ல. ஒரு தரப்பினால் சமாதானத்தைக் கொண்டுவரமுடியாது இரு தரப்பினரும் யுத்தநிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்: இப்பேச்சுவார்த்தைக்கு சகலதரப்பினரும்ஒத்துழைக்க வேண்டும்.

ஆனால் ஒருவருடத் தகுதிகாண் அரசின் காலத்தில் அதிகாரப் பரவலாக்கம் இடம் பெறமாட்டாதென்பதுடன் விடுதலைப் புலிகளும் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டும். இதன் பின்னர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை அரசு மேற்கொள்ள முடியும்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் ரில்வின்சில்வா மேலும் கூறியதாவது.

வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளினதும், உள்நாட்டு பிற்போக்கு சக்திகளினதும் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் மக்களின் ஆணையில்லாத நிலையில் தேர்தலில் போட்டியிட்டு அரசை நிறுவுவதற்கு சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் நாட்டுக்கு ஏற்படவிருந்த தீங்கினைத் தவிர்ப்பதற்காகவே நாம் சிலகோரிக்கைகளின் அடிப்படையில் அரசிற்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுக்க முன்வந்தோம்.

ஜனநாயகத்தை அர்த்தபுஷ்டியாக்குவதற்கும், குறித்த காலத்தில் இதனை நிறைவேற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு

### ஐ. தே. க.

இதுதொடர்பாக சபாநாயகர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் மீதும் பத்திரிகை மீதும் கடும் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் இதற்காக பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்,

இணங்கியுள்ளது:

எம்மைப் பொறுத்தளவில் நாம் பிரதமர் பதவிக்கோ, வேறுஅமைச்சர் பதவிகளுக்கோ ஆசைப்பட்டு கேட்கவில்லை இனிமேலும் கேட்கமாட்டோம் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டியவர்களாக உள்ளோம்;

நாம் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே அரசை ஆதரிக்கவுள்ளோம் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட சதி முயற்சிகளை ஜனாதிபதி தோற்கடித்தமைக்கு அவரை நாம் பாராட்டுகின்றோம் என்று தெரிவித்துள்ளார். (வ)

### அரசுக்கும் . . .

ஜே. வி. பியின் சார்பில்அதன் பிரதம செயலாளர் ரில்வின் சில்வாவும் கைச்சாத்திடவுள்ளனர்.

இவ்வைபவத்தில் பௌத்த பீடாதிபதிகள், மதகுரு'மார், மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்; (வ)

### புலிகளால்

தேசத்தில் கிளைமோர்க் குண்டுடன் இந்நபர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டவர் என்றும்.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் ஊடுருவல்தாக்கலுக்[illegible] இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கினாரென இவர் மீது விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அப்பிரதேச வாசிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரிடம் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும்கிளைமோர் குண்டு வெடிக்கச் செய்து இந்த மரண தண்டனையை விடுதலைப் புலிகள் மகிழடித் தீவுச் சந்தியில் நிறைவேற்றியதாகவும்;

அரசடித் தீவு வாசியான கந்தசாமி யோகேஸ்வரன் 32வயது என்பவரே மரண தண்டனை பெற்றவராவார்; (ம) (க.வ)

### விடுதலை

யில் ஜே.வி.பியினர் விடுதலைப்புலிகளோடு அரசாங்கம் பேசக்கூடாதென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் விடுதலைப்புலி

மாணவ மாணவிகளே!

அரச சான்றிதழ் ஒன்றைப்பெற்று உங்கள் எதிர்காலக் கணனிவேலைவாய்ப்பினை இலகுவாக்குவதற்கு ஓர் அரியசந்தர்ப்பம்!

குறிப்பு

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பம் ஒன்றின் அங்கத்தவர் ஒருவருக்கும், செவிப்புலனற்றோருக்கும் இலவச கணனிக் கல்வி.

★ புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளோருக்கு சலுகை அடிப்படையில் கணனிக் கல்வி.

Centre for Information Technology

சேவையே எமது நோக்கம்

For further Details
Course Manager
[கி-2447]

Information
Director

கம்பி வலைகள் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

புதிதாக பலகாவற் கோபுரங்களும் அமைக்கப்பட்டு அவற்றில் கடற்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் மின் வெட்டு அமுல் செய்யப்படும் நேரங்களில் பாதுகாப்புக் கடமையில் விசேட பயிற்சி பெற்ற பொலிசாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். (இ)

## தண்ணீர்

ளில் கல்விபயிலும் மாணவர்கள் நீர் அருந்துவதற்கு பெரிதும் கஷ்ட முறுவதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்தே பல்கலைக்கழகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பயன்படுத்தப் படும் என்றும் அவர் தெரிவித்தார்,

ஐக்கியதேசியக் கட்சியின் தேவைகளுக்கான பாராளுமன்ற நிகழ்ச்சிநிரலை தயாரிப்பதில் சபாநாயகர் தவறினால் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வரப்போவதாக ரவிகருணாநாயக்கா கூறியிருப்பதாக டெயிலிமிரர் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

## கரும்புலி

தாக்குதலின்போது கடற்கரும்புலி மேஜர் குமாரவேல் அல்லது நவி என்று அழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை சிவகுமார் (யாழ்மாவட்டம்) உயிரிழந்துள்ளதாகவும் புலிகளின்குரல் வானொலி அறிவித்துள்ளது (ம-4)

லைப்புலிகளோடு அரசாங்கம் பேசக்கூடாதென்ற நிலைப்பாட்டைட்டைக் கொண்டிருந்தாலும் விடுதலைப்புலிகளோடு பேசுவது என்ற அரசின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

அரசைப் பொறுத்தவரை சமாதானத் தீர்வு மற்றும் சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றில் ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றால்அரசாங்கம்அவர்களோடு பேசுவதற்கு தயாராக உள்ளது. இதன்காரணமாகவே வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுத்திருந்தார் என அமைச் சமரவீர மேலும் கூறினார். (இ)

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நியூலலிதாஸ் ஜுவல்லறி
174, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்

(கி-219)

நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.